# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (27.05.2015 முதல் 31.05.2015)

**அறிக்கை எண் 40/2015** **தேதி: 26.05.2015**

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 42°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 24°செ முதல் 31°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 23°செ முதல் 25°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 12°செ முதல் 16°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை காணபட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (27.05.2015 முதல் 31.05.2015)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 முதல் 73 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27.05.15 | 0 | 35 | 25 | 3 | 75 | 65 | 15 | தென் மேற்கு |
| 28.05.15 | 8 | 34 | 24 | 4 | 78 | 70 | 15 | மேற்கு |
| 29.05.15 | 12 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | தென் மேற்கு |
| 30.05.15 | 5 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | மேற்கு |
| 31.05.15 | 3 | 33 | 24 | 6 | 87 | 73 | 15 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ *28.05.2015* முதல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் காற்றின் வேகம் 15 கி.மீ-மணிக்கு எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவ கரும்பு மற்றும் ஐந்து மாதங்களான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ *28.05.2015* முதல் மழை எதிர்பார்க்கப்படுவதால் கோடை கால இறவை பருத்தி அறுவடையை *27.05.2015* க்குள் முடித்துக் கொள்ளவும்.
- ✓ மஞ்சள் நடவு செய்யும் தருணம் *31.05.2015* க்குள் முடிவடைவதால் கிழங்கினை தகுந்த விதை நேர்த்தி செய்து நடவு செய்யவும்.
- ✓ *27.05.2015* அன்று வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன்பே அறுவடை செய்து குவியலிட்ட எள் பயிரினை வெய்யிலில் உலர்த்தி பிரித்து எடுக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் கருது வரும் தருவாயிலுள்ள மக்காச்சோள பயிருக்கு போதுமான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

## குறுஞ்செய்தி

- ✓ *27.05.2015* அன்று வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன்பே அறுவடை செய்து குவியலிட்ட எள் பயிரினை வெய்யிலில் உலர்த்தி பிரித்து எடுக்கவும். மேலும் கோடை கால இறவை பருத்தி அறுவடையை *27.05.2015* க்குள் முடித்துக் கொள்ளவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.